# அகம்

செய்தி மடல்

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் - 2018

*வயிற்றுக்குச் சோறிடவேண்டும்- இங்கு*
*வாழும் மனிதருக் கெல்லாம்*
*பயிற்றிப் பலகல்விதந்து - இந்தப்*
*பாரை உயர்த்திடவேண்டும்.*


**பாரதியார்**

## அதிபரின் வாழ்த்து



மாணவர்களின் திறன்களைவளர்த்தெடுக்கும் களமாகப் பாடசாலைகள் திகழவேண்டும் என்பதேகல்வியின் பிரதான இலக்காகும். மாணவர்கள் தமதுகல்விக் காலத்தில் கற்றலோடுமட்டும் நின்றுவிடாது ஏனைய இணைபாடவிதானசெயற்பாடுகளிலும் தமதுதிறமைகளை வெளிப்படுத்திமுழுமையான ஆளுமையைப் பெறுவதற்குவழிகாட்டுவதுபாடசாலையின் கடமையாகும். அவ்வகையில் உயர்தரமாணவமன்றத்தின் வெளியீடாக அகம் எனும் செய்திமடல் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. மாணவர்களின் ஆக்கங்களோடுபாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பானபதிவுகளைஉள்ளடக்கியதாகமலரும் இவ்விதழ் பாடசாலையின் அடைவுகளைபதிவுசெய்யும் ஆவணமாகவும் உள்ளது. இந்த இதழ்தொடர்ந்து வெளிவரவேண்டுமெனவாழ்த்துகிறேன்.

**திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம்**



1992 ஆண்டுக.பொ.தசா / த பிரிவைச் சேர்ந்தமாணவர்கள் தாம் கல்விகற்றகிளிநொச்சிமகாவித்தியாலத்திற்குப் புதிதாகசரஸ்வதிசிலையினையும் மண்டபத்தினையும் அமைத்துக்கொடுத்தனர். 03.08.2018 அன்று திறப்புவிழாநடைபெற்றது. 1992 ஆண்டில் அவர்களுக்குவகுப்பாசிரியராக இருந்த திருமதிபரமேஸ்வரி அவர்கள் மண்டபத்தினைத் திறந்துவைத்தார்.

### அறிவாலயம்

இனிய இப் பாரினிலே
பலரும் போற்றிவாழும்
ஆயிரமாய் பிரஜைகளைப்
பண்புடனும் பணிவுடனும்
சமூகத்திற்கு அளிப்பது
கனிஷ்ராகல்லூரியே!

சில்லென்றுதென்றல் வீசும்
வடபுலத்தில்
அழகுநிறைகிளிநகரில்
பென்னம் பெரியமரக்களிடை நீ
சிங்காரக் குழந்தையைப் போல்
கல்விஎன்றசிம்மாசனத்தை
பலகாலம் ஆளவேண்டும்.

ஆலமரத்தைப் போன்று
கனிஷ்ராதாயே!
ஆன்றோர் பெயரில் - உறுதியான
ஆயிரம் கிளைகளைக் கொண்டு
ஆயிரம் ஆண்டல்ல - இவ்வுலகம்
வாழும் வரைஆனந்தமாய்
பிரகாசிக்கவேண்டும்.

கா.கஜந்தினி
2020 கலைப்பிரிவு





கிளிநொச்சிமகாவித்தியாலயத்தின் அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்வதுயோகர் சுவாமிகளால் நாட்டப்பெற்றபலாமரம். காலச் சூறைகளைக் கடந்து இன்றும் மிடுக்கோடு அழகுதருகிறது.




# வன்னியின் பெரும்போர் 2018

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கும் புதுக்குடியிருப்பு மத்திய மகாவித்தியாலயத திற்கும் இடையில் வருடாந்தம் நடைபெறும் வன்னியின் பெரும்போர் எனவர்ணிக்கப்படும் கிளிமுல்லைநட்புக் கிண்ணத்துடுப்பாட்டப்போட்டிகாவேரிகலாமன்றத்தின் அனுசரணையுடன் 2018.05.12 அன்றுகிளிநொச்சிமத்தியமகாவித்தியாலயமைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டி இருதரப்பிற்கும் வெற்றிதோல்வி இன்றிசமநிலையில் நிறைவுபெற்றது.



## நிலவுக்குத் தெரிந்த கதை

பௌர்ணமிநிலவின் விம்பம்
கிணற்றில் தெரிந்தது.
கதைகளைச் சொல்லும் நிலவிது.
செல்லடியில் செத்த
என்தந்தையின் முகம்
காணமல் போன
என் சகோதரன் முகம்
அணிவகுக்கும் விம்பங்கள்.
போரின் இடையே எனை ஈன்ற
தாயின் முகம்.
கண்கள் கலங்கியது.
நிலவும் கலங்கியது...

ஜெ.வோசிதன்
2020 கணிதப்பிரிவு

## சின்னஞ்சூட்டு நிகழ்வு



மாணவ தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டு நிகழ்வு 21.05.2018 அன்று நடைபெற்றது. நிகழ்வின் போது.

## ஒலிம்பியாட் போட்டி



2018 ஒலிம்பியாட் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட தெ.திருக்குமரன் மற்றும் தேசிய மட்டத்தில் 23 இடத்தினைப் பெற்ற ஆ.திருசோந்த் ஆகியோர்.



## சிறுவர் தினநிகழ்வு

01.10.2018 அன்று சிறுவர் தினத்தை முன்னிட்டு பொம்மலாட்டம் குதிரையாட்டம் உள்ளிட்ட பாரம்பரிய கலை நிகழ்வுகள் மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் நடைபெற்றன.





த. மிலானி - கலை 2020

# சிறுவர் துஷ்பிரயோகமும் உரிமையும்



சர்வதேசத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது என்று அறிந்தவர்கள் பலர் உள்ளனர். இருந்தாலும் இவர்கள் அந்த உரிமைகளைப் பாதுகாக்கின்றார்களா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இதனாலேயே சமூ கத்தில் சிறுவர் துஷ்பிர யோகங்கள் மலிந்து காணப் படுகின்றன. இவ்வாறான துஷ்பிரயோகங் களை நீக்க வேண்டு மாயின் சிறுவர்களுக்கு உள்ள உரிமைகளை அறிந்து அதைப் பாது காக்க வேண்டும். இவ்வாறான சிந்தனை களை உள்ளடக்கியே இக்கட்டுரையை நான் எழுதுகின்றேன்.

சிறுவர்கள் என்பவர்கள் யார்? என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள் என்று அழைக்கப்படுவர். இவர்களுக்கு உள்ள உரிமைகள் என்ன என்று பார்ப்போமானால் இலங்கை சிறுவர்களுக்கான உரிமைகளைப் பேணுவதில் அக்கறை கொண்டு 1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 12ஆம் திகதி சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தைப் பின்னுறுதிப்படுத்தியதுடன் 1992 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சிறார் பட்டயத்தையும் உருவாக்கியது. இச்சிறுவர் பட்டயத்தில் பல உறுதிமொழிகள் கூறப்பட்டன. அவையாவன,

1. 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள்.
2. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அரசின் கடமையாகும்.
3. குழந்தை பிறக்கும் போதே உயிர்வாழும் உரிமையுடனேயே பிறக்கின்றது.
4. குழந்தை பிறந்தவுடன் பதிவு செய்யப்படவும். பெயரைப் பெறவும்.தேசிய இனத்தைச் சார்ந்து வாழவும் உரிமையுண்டு.
5. குழந்தைப் பெற்றோரை அறியவும் அவர்ளிடமிருந்து பராமரிப்பை பெறவும் உரிமையைக் கொண்டுள்ளது.
6. பிள்ளைக்கு கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் கொடுத்தல் வேண்டும்.
7. பிள்ளையைப் பாதிக்கும் எந்த விடயத்திலும் அதன் கருத்தினை கவனத் தில் கொள்ளுதல் வேண்டும்.

இவ் வாறு சிறுவர்களுக்கான 40 உரிமைகளை இது முன்மொழிந்தது. இவ்வாறான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் சிறுவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாகவும் சிறந்த தலைவர்களாகவும் உரு வாகும் வாய்ப்பு உள் ளதாக சமவாயம் கூறி யுள்ளது. சிறுவர் உரிமைகளை மீறு வோர்கள் தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் சமவாயம் கூறியுள்ளது. அதற்கான சட்டங்களையும் அது முன்வைத் தது.

1. சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டம் 1998ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
2. பராமரிப்பு சட்டம் 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
3. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
4. இளம்பராயப் பெண்கள் தொழிச்சட்டம் 1956ஆம் ஆண்டு நடை முறைப்படுத்தப்பட்டது.
5. இளங்குற்றவாளிகள் கட்டளைச் சட்டம் 1939ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்து வந்தது.

இவ்வாறான சட்டங்களின் முக்கியத்துவம், பின்வந்த காலங்களில் தேவையாக இருந்தமையை அறிய முடிகின்றது. ஆகக் குறைந்த வயதெல் லைக்குறட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்ற மாகும் என்பதனையும் இலங்கைச் சமவாயம் முன்வைத்திருந்தது. சிறுவர்களுக்கு உரிமைகளும் அதை மீறுவோருக்குச் சட்டங்களும், தண்டனைகளும் நடைமுறையில் உள்ள போதும் எவரும் அதைக் கருத்தில் கொள்வதில்லை. சிறுவர் உரிமைகளை மீறும் செயற்பாடுகள் இன்றும் சமூகத்தில் நடந்த வண்ணமே உள்ளது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவன் ஆவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே." என்ற பாடலை சிந்தித்துப் பார்த்தால் குடும்பத்திலேயே தவறுகள் உள்ளதாக நினைக் கத் தோன்றும். ஆனால் சமூகத்தில் பல தரப்பட்ட நிகழ்வுகள் பிள்ளைகளைத் தவறான வழிவகைகளுக்கு இட்டுச் செல்கின்றன. மற்றும் குடும்பப் பின்னணியும் ஒரு காரணமாக அமையும். இன்றைய உலகில் தேவைகள் அதிகரித்து வருகின்றன. அதற்கேற்ப பணமும் தேவைப்படுகின்றது. ஆனால் குடும்பத்தில் தந்தையும், தாயும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய தேவை கட்டாயம் உள்ளது. இதனால் சிறுவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அன்பும் ஆதரவும் கிடைக்காமல் போகின்றன. இதுவும் சிறுவர்களைப் பாதிப்படைய வழிவகுக்கின்றன.

பெற்றோரின் கண்காணிப்பிலும் அரவணைப்பிலும் உள்ள சிறுவர்கள் நல்ல பிரஜைகளாக வருவது சாத்தியம். சிறுவர்களது உரிமைகளைக் கருத்திற் கொண்டு குடும்பத்தவர்களும், சமூகத்தவர்களும் நடந்து கொள்வதால் சிறுவர்களது உரிமை பாதுகாக்கப்படும். குடும்பத்தில் பல குழந்தை கள் பிறப்பதால் ஒருவருக்கொருவர் வித்தியாசமான அன்பைப் பெற்றோர் செலுத்துவதால் பாதிக்கப்படும் சிறுவர்கள் பல பிரச்சினைகளை கொண்டவர்களாக வளர்ந்து வருவார்கள். இவர்கள் சமூகத்தில் கீழ் நிலைக்குத் தள்ளப்படக் கூடியவர்களாகவும் காணப்படுவார்.

சிறுவர்களுக்கு கல்வி என்பது உரிமையாகும். "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றார் திருவள்ளுவர். கண் என்பது உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒன்று. கண்ணினாலே நன்மை தீமைகளை இனங்காண்கின்றோம். முறையில் நன்மை யெது தீமையெது என அறிந்து நடப்பான். எனவே ஒரு பிள்ளைக்கு கல்வி கண் போன்றது. அதைப் பெற்றோர்கள் கொடுக்காமல் மறுப்பது பிள்ளையின் உரிமையை மீறும் செயலாகும்.

சிறுவர்கள் என்போர் உலகத்தின் நாளைய தலைவர்கள் எதிர்கால சிப்பிகள் இவர்களது வாழ்க்கை சீர்குலைப்பது என்பது சமூதாயத்தின் கெடுதி என்றே கூறவேண்டும். கிராமப்புறபாடசாலைகளில் சிறுவர்கள் பாடசாலை செல்வது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. அவர்கள் சிறுவயதி லேயே தொழில் செய்ய தள்ளப்படுகின்றார்கள். இது அவர்களது கல்வி உரிமையை பறிக்கும் செயலாகும். இவ்வாறு பிள்ளைகளைச் சிறுவயதிலே தொழிலுக்கு விடுபடுபவர்கள் தண்டனைக்கு உட்படுவார்கள். பிள்ளைகள் தமது அறிவு வளர்ச்சி அடையும் வரையிலேயும் அவர்கள் விரும்பிக்கற்கும் வரைக்கும் பாடசாலைக்கு அனுப்புவது பெற்றோரின் கடமையாகும்.

தனது பிள்ளையை நல்ல முறையில் வளர்க்க முடியாதவர்கள் எவ ராயினும் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். ஐந்தறிவு மிரு கத்திற்கும் பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவு படைத்த மனிதனுக்கும் வேறுபாடு இல்லாமல் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தும் மனித இனம் இழிவுடையதே. சிறுவர் என்போர் உலகத்தின் நாளைய தலை வர்கள் இவர்களது வாழ்வைச் சீரழிக்கும் எந்தவொரு தனி மனிதனும் சமூ தாயமும் தலைநிமிர்ந்து நிற்காது.

இவ்வாறான துஷ்பிரயோகங்களால் சிறுவர்கள் பல தாக்கங்களை சந்திக்கின்றார்கள்.

1. உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்
2. உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்
3. புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகம்
4. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்

இவ் வாறான துஷ் பிரயோகங்கள் பிள்ளை களின் மனநிலையை பாதிப்படையச் செய்யக் கூடும். சிறுவர்களைத் துன்புறுத்துவது வேலைக் கமர்த்துவது எதிர்பாலர் தமது வேலைக்காக சிறுவர்களைப் பயன்படுத்துவது என்பது தண்டனைக்குரிய குற்ற மாகும்.

எனவே எதிர்கால உலகின் தலைசிறந்த மனிதர்களாக சிறுவர்கள் வளர்வதற்கு சமூகம் அவர்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும். நடை முறையில் இதை எல்லோரும் சிந்திப்போம். ஆனால் நல்லதொரு சமூதாயத்தை நல்லதொரு நாட்டை உருவாக்க முடியும்.

# சிறுகதை

ப.பதுமிதா - விஞ்ஞானப்பிரிவு

அமலன் திண்ணையில் இருந்து இறங்கி வந்து குசினிக்குள் எட்டிப்பார்த்தான் அம்மாவைக் காணவில்லை.

காலையில் தேநீருக்காக மூட்டிய அடுப்பு அப்போது அணைந்து போயிருந்தது. அம்மா சாப்பாடு எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஆக இன்றைக்கும் காலையில் குடித்த தேநீருடன் பாடசாலை போகவேண்டியது தான். வயிற்றுக்குள் கிர்ரென்ற இரைச்சல்... ஏதாவது சாப்பிட முடியும் என்று காத்துக் கொண்டிருந்தவனுக்கு நிலைமையும் புரிந்தது. பேசாமல் போய் அரைச்சுவரில் வைத்திருந்த புத்தகப்பையை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டான். அந்தப்பத்து வயதில் குடும்பத்தின் நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டவன் அவன். உழைத்துத் தர ஆண்துணை இல்லாத குடும்பம். மிகவும் சிறிய வயதில் தந்தையின் நேசத்தை அனுபவித்தது கனவு மாதிரி இருந்தது. மனதின் ஆழத்தில் அந்த அனுபவம் இப்போதும் இனிமையாய் பரவியிருந்தது.

அந்த ஆசையான அப்பா ஆறு வருஷத்திற்கு முன்பு ஆனையிறவில் ஏவப்பட்ட ஷெல்க்கு இரையான போது அழவும் தெரியாத பருவத்தில் அவன் இருந்தான். அம்மாதான் உழைத்து அவனை வளர்த்துக்கொண்டிருந்தாள். அநேகமான நேரங்களில் அம்மாவை அழுத முகத்துடன் அவன் பார்க்க நேரிடும். அம்மா எவ்வளவு பாவம் அதனாலேயே அவன் அம்மாவிடம் எதையும் கேட்பது இல்லை. அமலன் புத்தகப்பையுடன் முற்றத்தில் நின்று சுற்றும் முற்றும் பார்த்தான். வானத்தில் ஏதோ இரைச்சல் கேட்பது போலிருந்தது. மனம் திடுக்கிட்டுப் போக நிமிர்ந்து பார்த்தான். " கிபிர்" ஏதும் பறக்கிறதா என்று கலவரமாய் இருந்தது. கிபிர் என்றாலே மனம் பயத்தில் படபடவென்று அடித்துக் கொள்ளும். நல்லவேளை . கிபிர் ஒன்றும் பறக்கவில்லை தூர எங்கையோ மோட்டார் சைக்கிள் இரைகின்றது போலும் அவன் நிம்மதியுடன் அம்மாவைத் தேடினான்.

அம்மா !.. அம்மோய்!!.. கிணற்றடிக்குப் பக்கத்திலிருந்த அம்மாவின் முகம் வாடிப்போய் இருந்தது. அம்மா நான் ஸ்கூலுக்குப் போட்டு வாறன் அம்மா""ஓம்பு கவனம் கிபிர் எதுவும் வந்தால் பள்ளிக்கூடத்துக்க இருக்கிற பங்கருக்குள்ள ஓடிப்போய் இருக்க வேணும் என்பாள்""ஓமம்மா நான் வாறன்..." " நான் பிள்ளைக்கு மத்தியானம் சோறு காச்சி வைக்கிறன் வந்தவுடன் சாப்பிடலாம் என" அவன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தலையாட்டினான். அவள் செருப்புப் போடாத கால்களுடன் தெருவிலிறங்கி நடந்தான். அவனுக்கு தெரியும் அம்மா தன்னைப் போகவிட்டுவிட்டு வருவாள் என்று அதற்காகவே தனக்கு பசி இல்லாதது போலவும் முகத்தில் வாட்டம் இல்லாதது போலவும் காட்டிக்கொண்டான்.

தெருவில் வேகமாக நடக்க அவனால் முடியவில்லை. வயிற்றுக்குள் எதுவோ புரண்டது. வெறும் வயிறு இரைந்தது. இப்போது இரண்டு நாட்களாக காலையில் எதுவும் சாப்பிடாமல் தான் பாடசாலைக்குப் போகின்றான். புல்லுப்புடுங்கிற வேலை நாற்று நடுகின்ற வேலை முடிந்துவிட்ட நேரம். இனி வயலில் அரிவு வெட்டு வரும் வரை அம்மா வேலைக்குப் போக மாட்டாள். வேலை கிடைக்காது. இனி அரிவு வெட்டு வரும் வரை இப்படித்தான். அரைவயிறு கால் வயிறாக இருக்க வேண்டும்.

நேற்றாவது பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த போது சோறும் சம்பலும் இருந்தது. இன்றைக்கு அதுவும் இருக்குமோ தெரியவில்லை. பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வர மூன்று மணியாகிவிடும். அதுவரை இந்தப் பசியை எப்படி பொறுத்துக் கொள்வது என்று அவனுக்கு யோசனையாக இருந்தது.

வயிற்றில் இரைச்சலுடன் பாடங்களையும் கவனிக்க முடியாது. குறைந்தது இரண்டு ஆசிரியரிடம் ஆவது இன்றைக்கு அடி வாங்கப் போவது நிச்சயம். முடிந்தவரை வேகமாக நடந்தான். கோவிலடி கடந்து நடக்கும் போது அவனுடன் படிக்கும் குசன் தன் தமயனின் சைக்கிளில் அவனைக் கடந்தான்.

"அமல்! கேதியாய் வாடா நேரமாயிடும்!" குசன் சொல்லிட்டு போனான் எவ்வளவு வேகமாய் நடந்து வந்தும் பாடசாலை வாசலை அடைந்த நேரம் இரண்டாவது மணியும் அடித்து வாசல்கேற்றும் மூடப்பட்டுவிட்டது. வெளியே நின்ற பத்துப் பதினைந்து மாணவர்களுடன் அவனும் பயத்துடன் நின்று கொண்டான். அதிபர் வந்து தாமதமாய் வந்ததுக்கு காரணம் கேட்டு ஒவ்வொரு அடி அடித்து உள்ளே விட்டார். அவன் மௌனமாக தன் கையை நீட்டினான்.




"ஏன் பிந்தி வந்தனி? அதிபரின் அதட்டலில் கண் விளம்பில் நீர் துளிர்த்தது. "ஒரு கட்டை தூரம் நடந்து வாறன் சேர்""ஏய் வெள்ளன வெளிக்கிட்டு வாறதுதானே!." அம்மா ஏதும் சமைக்கக்கூடுமோ என்று சாப்பிடுவதற்கு பார்த்துக் கொண்டிருந்த காரணத்தை சொல்ல முடியவில்லை பேசாமல் நின்றான்.

"இனிமேல் கெதியாய் வர வேணும் ஒரு கையில் அடித்த அடி ஏனோ உறைக்க வில்லை" பிரன்சிப்பல் அடிச்சது நோகுதாடா" என்று குசன் கேட்ட போது இல்லை என்று சிரிக்க முயன்றான். வகுப்பில் பாடங்களை கவனிக்க முயற்சி செய்தும் முடியவில்லை. காதை அடைத்துக் கொண்டு வந்தது. மத்தியானம் இடைவேளை மணி ஒலித்தது. அந்த நேரம் அவனைப் பொறுத்தவரை மிகவும் தண்டனைக்குரிய நேரம் எல்லாப் பிள்ளைகளும் தாங்கள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டுப் பொதியை எடுத்துச் சாப்பிடும் நேரம்.

அவன் கடைசி வாங்கில் வேறுபக்கம் பார்த்துக் கொண்டிருப்பான். சாப்பாடுகளின் பல் வகையான வாசனை வந்து மூக்கை நிறைத்து அவனது பசி இன்னும் கிளப்புகின்ற சோதனையான நேரம் அது. குசன் தனது சாப்ப ாட்டு பெட்டியுடன் அருகில் வந்து " வாவென் அமல் என்னோட சாப்பிடலாம் என்றான். வேண்டாமடா எனக்கு பசிக்கேல்ல" குசன் மற்றவர்களுடன் சாப்பிட முன் வாங்கில் போய் அமர்ந்தான். விறாந்தையில் சென்று கொண்டிருந்த புவனா ரீச்சர் "ஏன் அமல் . சாப்பாடு கொண்டு வரவில்லையா" என்று கேட்டார். " இல்லை ரீச்சர்" என்ற போது உள்ளே அழுகை வந்தது.

ரீச்சர் போக திசையை பார்த்துக் கொண்டிருந்தவன் விறாந்தை ஓரம் ஓடி வந்த நாயின் மீது தன் பார்வையைத் திருப்பினான். எங்கே நின்றாலும் இந்த நேரத்திற்கு வகுப்புக்களின் வாசலுக்கு அந்த நாய் வந்துவிடும் வயிறு ஒட்டி மெலிந்த நாய். அதுவும் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ என்று அவன் கவலையுடன் நினைத்துக் கொண்டான். அவன் காலுக்கு அருகில் வந்து நின்று சாப்பிடும் மாணவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது அந்த நாய். அப்போது திடீரென்று வானத்தில் ஒரு பேரிரைச்சல்!.. அடுத்தடுத்து இரண்டு விமானங்கள் வேகமாய் சுற்றி வந்தன.


"அய்யோ!" பிள்ளையள் !. ஏல்லோரும் பங்கருக்குள்ள ஓடுங்கோ!." புவனா ரீச்சரின் குரல் சத்தமாய் கேட்டது.

அவ்வளவு தான் அடுத்த வினாடி சூழ்நிலை மாறிப் போனது. மாணவர்கள் பிரித்த சாப்பாடுகளை அப்பிடியே போட்டுவிட்டு ஓடத்தொடங்கினார்கள். ஓவென்ற அறலும் அம்மா என்ற கதறலுமாகச் சிதறி ஓடினார்கள். குண்டுவீச்சு விமானங்களின் ஓசையும் இவர்களின் ஓவென்ற கூப்பாடும் ஒரு நிமிஷம் அமளைத் திகைக்க வைத்தன. ஓடியவர்கள் கை தவறிவிட்ட சாப்பாட்டுப் பொதிகள் சிதறி நிலத்தில் விழுந்ததைப் பார்த்ததும் அவன் மனம் பதறியது. அவன் காலடியில் விழுந்த பொதி விரிந்து கொள்ள இடியப்பமும் ! பொரியலும்!. அந்த மெலிந்த நாய் வகுப்பறைக்குள் நுழைந்து கீழே விழுந்து கிடந்த உணவை அவசரமாகச் சாப்பிடத் தொடங்கிய நேரம் அமலின் காலின் கீழே இருந்த உணவை ஒரு வினாடி தயக்கத்துடன் பார்த்தான்.

அடுத்த வினாடி கால் மடித்துக் குனிந்து அமர்ந்தபடி அந்த இடியப்பத்தை எடுத்து வாய்க்குள் திணித்துக் கொண்டான். விமானத்தின் இரைச்சலோ... அது மிகவும் சமீபமாகக் குத்தி எழும்பிய ஓசையோ அவனுக்கு கேட்கவே இல்லை.

## பாரதி விழா

உயர்தர மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பாரதி விழாவானது பாடசாலையின் கேட்போர் கூடத்தில் 14.09.2018 வெள்ளிக்கிழமை அன்று மன்றத்தலைவர் சுகிராஜ் தலைமையில் நடைபெற்றது. பாடல், பேச்சு,நடனம், கவியரங்கு, விவாதம் உள்ளிட்ட நிகழ்வுகள் அரங்கேறின. விழாவின் நிறைவில் பாரதியார் தொடர்பான ஆவணப்படம் திரையிடப்பட்டது.



## மாணவ முதல்வரின் ஏற்பாட்டில் ஆசிரியர் தினவிழா

2018 ஆசிரியர் தின நிகழ்வுகள் மாணவ முதல்வர்களின் ஏற்பாட்டில் 05.10.2018 அன்று கல்லூரி பிரதான மண்டபத் தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.வாசுதேவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். பாடல், நடனம், வில்லுப் பாட்டு உள்ளிட்ட நிகழ்வுகள் அரங்கேறின. முன்னதாக, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான நட்புறவு ரீதியிலான கபடி, துடுப்பாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# இயல்வாணனின் பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம்



-நூல் விமர்சனம்-

இலக்கியங்கள் காலத்தின் உற்புவிப்புகளாக விளங்குகின்றன. நவீன உரைநடை வளர்ச்சியின் பின்னர் சிறுகதை, நாவல், கவிதை என்பன அதன் நிலையிலும் வடிவ நிலையிலும் பல்வேறு மாற்றமடைந்துள்ளன. அந்த வகையில் சமூகப்பண்பாட்டுச் சூழலுடன் மனித வாழ்வியலை இணைத்து எழுதப்பட்ட பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம் எனும் சிறுவர் நாவலானது இயல்வாணன் அவர்களால் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்நாவலானது கதைப் போக்கில் கிண்டலும், வருணனையும், சுவாரசியமும் ஏற்படுத்தக்கூடிய கற்பனை கலந்ததாகவும் காணப்படுகின்றது. இந்நாவலானது சிறப்பான கருப்பொருளைக் கொண்டு உள்ளது. குறிப்பாக கிராமியப் பாட்டியான பாக்கியம் பாட்டியின் ஆசைகளும், விருப்பங்களும் கருப்பொருளாக அமைகிறது.

இந்நாவலானது சிறப்பான பாத்திரங்களைக் கொண்டுள்ளது. பாத்திரப்படைப்பு என்பதை எளிதில் தீர்மானித்து விட முடியாது. அதாவது மனிதர்களுடைய இயல்பு, பலம், பலவீனத்தை பொறுத்தே பாத்திரங்கள் படைக்கப்படும். அவ்வகையில் இந்த நாவலில் முதன்மைப் பாத்திரமாக பாக்கியம் பாட்டி குறிப்பிடப்படுகின்றார். அதே போல துணைப்பாத்திரங்களாக மகன் சத்தியசீலன் அவருடையமனைவி வித்தியா மற்றும் அவர்களுடைய மகள் சுடர்விழியும் உதிரிப்பாத்திரங்களாக வெங்கடாசலபதி, யப்பானிய பெண் ஒபுகியோ அவருடைய கணவர் யசிகிட்டோ, சீனவிஞ்ஞானிகள் (யுங், வாங்) அமெரிக்க வர்த்தகர், அமெரிக்க விஞ்ஞானி கிளார்க் போன்றோரும் படைக்கப்பட்டுள்ளனர்.

இயல்வாணனின் பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம் எனும் நாவலிலே பாக்கியம் பாட்டி பாத்திரமானது சிறப்பாகப்படைக்கப்பட்டுள்ளது. இக்கதையின் கருப்பொருள் இப் பாத்திரத்தினூடாகவே பயணிக்கின்றது. அதேவேளை இப்பாத்திரம் நகைச்சுவை உணர்வு மிகுந்த பாத்திரமாகவும் திகழ்கிறது. இறை நம்பிக்கை கொண்டவராகவும், சாத்திர சம்பிர தாயங்களை விட்டுக் கொடுக்காதவராகவும், மகன் சத்தியசீலன், பேர்த்தியின் மேல் அன்பு கொண்டவராகவும், தான் வாழ்ந்த மண் மீது தீராப்பற்றுக்கொண்டவராகவும் பாக்கியம் பாட்டி காணப் படுகின்றார்.

எடுத்துக்காட்டு :- "மேனை வெங்கடாசலபதி! ஒரு சின்ன உதவியடா.... சின்னச்சொப்பிங் பையுக்குள்ள இரணைமடு மண் கொஞ்சத்தை எடுத்துத்தா அப்பு...

கண்டறியாத படிப்பு. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல்...

என்று பாக்கியம் பாட்டி தனக்குள் பொருமிக்கொள்வதில் இருந்து பேர்த்தி மீது கொண்ட அன்பு புலனாகின்றது. மேலும் மகன் சத்தியசீலன் மற்றும் மனைவி மகள் சுடர்விழி போன்றோரும் பாக்கியம் பாட்டி மீது அன்பு கொண்ட பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நாவலினது உயிர்ப்பு கதைப்பின்னல் ஆகும். விண்வெளியில் ஒரு சிறுகிரகம் போல் நீள்வட்டப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் 'தாயகம்' விண்வீட்டில் பாக்கியம் பாட்டியின் மகன் விஞ்ஞானி சத்திய சீலனும், அவருடைய மனைவி வித்தியாவும் அவர்களுடைய ஒரே மகள் சுடர்விழியும் வசித்துவருகின்றார்கள். அவர்களைக்காண இரணைமடு ஏவுதளத்தில் இருந்து வெண்ணிலா விண்கலத்தில் பாக்கியம் பாட்டி பயணிக்கிறார். பாட்டி விண்வெளிக்கு பயணம் செய்வதற்கு முன் எதிர்கொண்ட சிக்கல்களையும் இரண்டு சீன விஞ்ஞானிகள், அமரிக்கா கோடீஸ்வர வர்த்தகர் மற்றும் விஞ்ஞானிகளான யப்பானிய தம்பதியினருடன் விண்வெளியில் பயணிக்கும் போது பாட்டி எதிர்கொண்ட மனஉளைச்சல்களையும் மகனுடன் அவர் தாயகம் விண் வீட்டில் தங்கியிருந்த வேளையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் சுவாரசிய மாகவும் அங்கதமாகவும் வெளிப்படுத்துவதாகக், கதைப்பின்னல் அமையப்பெற்றுள்ளது.

நாவலானது இடம்பெறும் இடமாக வெண்ணிலா விண்வெளி காணப்படுகின்றது. இச்சிறுகதையானது பாக்கியம் பாட்டி விண்வெளி செல்வதாகவும் கற்பனை மிகுந்ததாகவும் எதிர்காலத்தில் இவ்வாறு நடக்கலாமா? என்ற கேள்விகளையும் தருகின்றது. அறிவியல் உண்மை களையும் விளக்குகின்றது. இவ்வகையில் பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம் எனும் தலைப்பானது இந்நாவலுக்கு பொருத்தப்பாடு உடையதாகக் காணப்படுகின்றது.



இயல்பாணன் ஆசிரியரால் சிறப்பான மொழிநடையைக் கொண்டு இந்நாவலானது நகர்த்தப் படுவதைக்காணலாம். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் நகைச்சுவை கலந்த எளிய மொழிநடையாகக் காணப்படுகின்றது. மேலும் கிராமியப் பேச்சு வழக்கும் மற்றும் மண் வாசனை கலந்ததாகவும் காணப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக :- "போடி போக்கத்தவளே! கைலாயத்துக்குப் பக்கத்திலை தானே விண்வீடும் இருக்கிது. நேரை போய் தேவர்களையும் கடவுளையும் பாத்திட்டு வந்தால் போச்சுது." இவ்வகையில் இவ்வகையில் நாவலானது சுவாரஸ்மாகவும் நகைச்சுவை மிகுந்ததாகவும் அறிவியல் உண்மைகளை விளக்குவதாகவும் அமையப்பெற்றுள்ளமை சிறப்பாகும்.

யோ.றஜீபா
2019 கலை

## கணித விஞ்ஞான வினாடி வினாப்போட்டி



கிளிநொச்சி பொறியியல் பீட மாணவர்களால் நடாத்தப்பட்ட கணித விஞ்ஞான வினாடி வினாப்போட்டியில் பங்குபற்றிய அணியினரான ச.வர்ணன், ர.சதுர்சன், ம.மாதங்கி ,தே.சபில்ஷன், இ.துவாரகா ஆகி யோர் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமைசேர்த்தனர். போட்டியில் பங்குபற்றிய மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும்.

## சமூக விஞ்ஞானப் போட்டி 2018 வெற்றியீட்டிய மாணவர்கள்





தேசிய மட்டம் சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய ரீதியில் வெற்றி பெற்று சாதனை படைத்தோர் செ.வத்சலா தரம் 7 தேசிய ரீதியில் 2ஆம் இடம், சி.கஜானன் தரம் 8 தேசிய ரீதியில் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## மாகாணமட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்றோர்









தரம் 7 தெ.திருக்குமரன் 1ஆம் இடம்,
தரம் 8 த.சிவனுஜா. 2ஆம் இடம்
தரம் 9 சி.கஜானன் 2ஆம் இடம்,
தரம் 11 சாரங்கன் 1ஆம் இடம்

# யாழ்மண்ணை நோக்கி

**கிளி** / கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் உயர் தரத்தை சேர்ந்த கலைப்பிரிவு மாணவர்களாகிய நாம் 2018.07.02 அன்று காலை 6.50மணியளவில் வயலும் வயல் சார்ந்த மருத மண் சூழ்ந்த கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இருந்து பேரூந்தில் கடல் வளம் கொண்ட நெய்தல் நிலம் சூழ்ந்த யாழ் மண்ணை நோக்கிப் புறப்பட்டுச்சென்றோம். யாழ் மண்ணின் மண் வாசனையையும் கலை கலாசார பண்பாட்டு பௌதிக அம்சங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு சுற்றுலா சென்ற மாணவர்களாகிய நாம் பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொண்டோம்.

யாழ் மண்ணை நோக்கி புறப்பட்ட பேருந்து காலை 8.00 மணியளவில் நாவற்குழி திருவாசக அரண்மனையைச் சென்றடைந்தது. "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது சான்றோர் கருத்து. அக்கருத்திற்கேற்ப நாவற்குழி சிவதெட்சணமூர்த்தி தலத்திற்குள் சென்றதும் எங்கும் பக்தி மயமாக திருவாசகம் ஒலித்தபடி இருந்தது. ஆலயத்தினை வலம் வந்து அனைவரும் வணங்கிய பின்னர் இவ்வாலயத்தின் சிறப்புக்களையும் பார்வையிட்டோம். இங்கு 108 சிவலிங்க பிரதிஷ்டையுடன் கூடிய கலையம்சங்களுடைய ஆலயமாகக் காட்சியளிக்கின்றது. அத்துடன் 658 திருவாசகப்பாடல்கள் கருங்கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி சிவபுராணமானது தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரேஞ்சு, பாளி போன்ற பன்னிரெண்டு மொழிகளில் செதுக்கப்பட்டுள்ளன. எக்காலத்திலும் அழியாத கருங்கற்களில் திருவாசகம் செதுக்கப்பட்டுளளமை பார்ப்பவர் மனதை ஈர்க்கும் தன்மை கொண்டதாக காட்சியளிக்கின்றது.

பேருந்து தொடர்ந்து யாழ் பெரிய கோவிலினை சென்றடைந்தது. யாழ் மண் ணின் பழைமையினைத் தாங்கிய இக்கோவில் பிரமாண்டமான கட்டடத்தொகுதியைக் கொண்டதாகவும் சுற்றியுள்ள சூழல் அமைதியின் அடையாளமாகவும் திகழ்கின்றது. இத்தேவலாயத்தின் உட்புறம் பெரிய ஆராதனை மண்டபத்துடன் கூடிய ஒளி வீசும் கருணையைப் பொழிகின்ற இயேசு கிருஸ்துவின் சிலையானது அமைந்துள்ளது. இங்கு இயேசுவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரையான காட்சிகள் சிலைகளாகவும் படங்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இப்பெரிய கோவில் யாழ் மண்ணின் பழைமையின் ஆதாரமாக விளங்குகின்றது.

சங்குகள் ஒலிக்கும் மீனினம் பாடும் இறால் வளம் கொண்ட கடலோடு இணைநத யாழ் நகரின் கோட்டையினை மாணவர்களாகிய நாம் உற்சாகத்துடன் அண்மித்துச் சென்றோம். கோட்டையின் வாயில்கள் பாரிய கருங்கற்களைக் கொண்ட அரண்களுடன் காட்சியளித்தது. கோட்டையைச் சுற்றி பகைவர்களிடம் இருந்து பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்ட அகழிகள் சேறுடன் நீர் தாங்கியபடி பயங்கரமாகக் காணப்பட்டது. இக்கோட்டையின் வரலாறு பற்றி

தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் கூறுகையில் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஐரோப்பியரான போர்த்துக்கேயர் பாதுகாப்பிற்காகவும் நிர்வாகத்திற்காகவும் இக்கோட்டையை அமைத்தாகவும் ஆரம்பத்தில் இக்கோட்டை நாற்பக்கல் வடிவமுடையதாகவும் காணப்பட்டது என்றும் இதனைத் தொடர்ந்து யாழ் மண்ணை ஆட்சி செய்த ஒல்லாந்தர் ஐந்து பக்கங்களையுடையதாக இக்கோட்டையை மாற்றியதாகவும் குறிப்பிட்டார்.

ஆங்கிலேயர் காலத்தில் இக்கோட்டையின் மேற்குப் புறமாக ராணி மாளிகை ஒன்றை அமைத்துள்ளனர். மேலும் இக்கோட்டையின் வடகிழக்கு திசையில் "கிறிஸ்கே" எனப்படும் ஆலயம் ஒன்று அமைக் கப்பட்டுள்ளது. இவ்வாலயம் தற்போது இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. ஆலயத்தைத் தொடர்ந்து கிழக்குப்புறமாக உள்ள படியின் மீது ஏறி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மேற்பக்கமாகச் சென்றோம். அங்கு அமைக்கப்பட்ட தூக்குமேடை இடிபாடுகளுடன் காட்சியளித்தது. அவ்விடத்திலிருந்து பார்க்கும் போது அழகாக இருந்தது. அங்கு காணப்பட்ட வர்த்தக நிலையம் ஒன்று தற்போதும் இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. 2009ஆம் ஆண்டு மத்திய கலாசார நிதியத்தினால் இக்கோட்டை மீள்புனரமைப்பு செய்யப்பட்டதுடன் தற்போது மத்திய கலாசார நிதியத்தின் உதவியுடன் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது.தமிழர்கள் இப்பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்துள்ளமைக்கான ஆதாரங்கள் பல கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தகைய பாரம்பரிய பண்பாட்டு அம்சமான யாழ்ப்பாணக்கோட்டை வரலாற்று அடையாளமாகும். இதனை எதிர் கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும்.

யாழ் மண்ணின் குறியீடாக விளங்கும் பனை மரங்கள், பரந்த வீதியெங்கும் உயரமாக வளர்ந்துள்ளன. யாழ் மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஒன்றான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளையும் காணக் கூடியதாக இருந்தது. குறிப்பாக வெங்காயம், மிளகாய், கோவா போன்ற சிறு பயிர்களும் திராட்சை போன்றனவும் பயிரிடுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

மனித வளமும் இயற்கை அன்னை தந்த வரமும் ஒன்றாக இணைந்த யாழ் மண்ணின் மண் வாசனையை நுகர்ந்தபடி காலை 10.15 மணியளவில் யமுனா ஏரியினைப் பார்வையிட சென்றோம். யமுனா ஏரியானது பண்டைய கால அரசிகள் நீராடிய தடாகம் எனக் கூறப்படுகின்றது. ஆயினும் யமுனா ஏரி பற்றிய வரலாற்று சம்பவங்கள் தொடர்பான பதிவுகள் அவ் விடயத்திலே குறிப்பிடப்படவில்லை. அவ்விடத்தை பார்வையிட வருபவர்கள் யமுனா ஏரி தொடர்பான தகவல்களை அறியமுடியாது உள்ளமை வேதனையாக இருந்தது. நாம் மந்திரிமனையையும் பார்வையிட்டோம்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறுபட்ட வரலாற்று புகழ் பெற்ற இடங்களைப்பார்வையிட்ட நாங்கள் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற றியோ ஐஸ்கிறிம் கடையில் மகிழ்ச்சியான சிறு பொழுதை குளிர்பானம் அருந்திக்களித்தோம்.



பின்னர் யாழ் நகரின் புகழ்பெற்ற இறையகமான மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தைச் சென்றடைந்தோம். இவ்வாலயத்தின் அருகாமையில் 78 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலையானது கதாயுதம் ஏந்தியவாறு உள்ளமை மலைப்பாக இருந்தது. ஆசிரிய மாணவர் சகிதமாக ஆலய பூசையில் கலந்து கொண்டு மீண்டும் பயணம் தொடர்ந்தது. பின்னர் பண்டைய தமிழர்கள் மற்றும் தமிழ்ப் பௌத்தர்களின் வாழ்வியல் ஆதாரங்கள் பல காணப்படும் கந்தரோடையின் வரலாற்றுச் சின்னங்கள் பலவற்றைப் பார்வையிட்டோம்.

தமிழ் தழைத்தோங்கும் யாழ் மண்ணின் மாதகல் என்ற ஓர் இடத்தில் உள்ள சிவன் ஆலயத்திற்கு சென்றோம். கடலலை மோதும் கலைகளிலே உப்புக்காற்றின் பரவசத்தில் தியானநிலையில் அமர்ந்திருக்கும்




வரலாற்றுச் சிறப்புமிக்க சிவனைத் தரிசித்த பின்னர் சங்கமித்தா விகாரையைச் சென்றடைந்தோம். இங்கு பல்சமய கலாசாரத்தை எம்மால் காணமுடிந்தது. அதாவது புத்தபகவான் சிலையுடன் விநாயகர் சிலையும் அருகில் காணப்பட்டது. அச்சூழலானது அரசமரங்கள் நிறைந்த பசுமையான சூழலாக காட்சியளிக்கின்றது. பெருங்கடலானது ஆர்ப்பரிக்கும் அலைகள் மோதுகின்ற கரைகள் ரம்மியமானதாக காணப்பட்டது. சங்கமித்தா வந்து இறங்கிய காட்சியானது பளபளக்கும் சிலையாக வார்க்கப்பட்டுள்ளதுடன், அவர் வருகை தந்த தோணியின் அமைப்பில் தோணி வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அலைகள் மோதும் கடற்கரையின் மணலிலே மாணவர்களாகிய நாம் மனம்

# ஒரு கல்விச் சுற்றுலா



மகிழ்ந்து ஆவல் தீர ஆடிப்பாடினோம். பயணம் செய்த களைப்பினை போக்குவதற்காகவும் மதிய உணவிற்காகவும் லூர்க்தேவி தேவால யத்திற்குச் சென்றோம். அவ்விடயத்தில் மாண வர்களும் ஆசிரியர்களும் ஒன்றாக இணைந்து மதிய உணவு உண்டோம். புனிதத்துவம் பொருந்திய இவ்வாலயத்தின் பின்பக்கத்தில் அலைகள் மோதும் கரையிலே அன்னை மரியாளின் சிலை ஒன்று காணப்படுகின்றது. இங்கு காணப்படும் ஒவ்வொரு சிலையும் பார்ப்பவரை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. அந்த வகையில் இயேசு கிறிஸ்துவை சிலு வையிலே அறையும் காட்சி ஒவ்வொன்றும் தங் கத்தால் மெருகூட்டப்பட்டது போன்று சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிலையையும் பார்க்கும் போது இயேசு கிறிஸ்து வின் வரலாறு கண்முன்னே தோன்ற காரண மாக அமைகின்றது. குறிப்பாக இயேசுவின் இறந்தது போன்ற ஒர் சிலையானது ஒருகணம் உண்மையானதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் அளவிற்கு காட்சியளிக்கின்றது.

யாழ் மண்ணை நோக்கிய எமது பயணமானது தமிழர்களின் கலை கலாசாரப் பண்பாடுகளை பாதுகாக்கும் சிவபூமி அருங்காட் சியகத்தை சென்றடைந்தது. நாம் அங்கு முன் னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையினை யும் அவர்கள் வழி வந்து இன்று அழிந்து போன கலை கலாசாரங்கள் மற்றும் பண்பாடுகளை அறிந்து கொண்டோம். இதனால் பெரும் மகிழ்ச்சியடைந்த அதே வேளை இத்தகைய கலாசாரங்கள் நமது மத்தியிலிருந்து விலகிச் சென்று விட்டதே என எண்ணி மனம் வருந்தி னோம்.

பண்டைய தமிழரின் பாரம்பரிய கலை மரபுகளான தப்பாட்டம், கூத்துக்கள், கிராமிய நடனம் போன்றனவும் ஆடை அலங் காரங்கள் தொழில்சார் பண்பாட்டு அம்சங்கள், பொழுது போக்கு சார்ந்த அம்சங்கள் போன்ற விடயங்கள் அங்கு ஆவணப்படங் களாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதுமட்டு மன்றி பழமையைப் போற்றும் கைவினைப் பொருட் கள், தொழில்சார் உபகரணங்கள் மட்பாண் டங்கள், பழங்கால அணிகலன்கள் போன்ற பொருட்களும் காணப்பட்டன. கிராமிய வாழ்க் கையைப் பிரதிபலிக்கும் பல்வேறுபட்ட விட யங்களை மாணவர்களாகிய நாம் அறிந்து கொண்டோம்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என ஔவையார் கூறியுள்ளார். அதற்கிணங்க எங்கு பார்க்கினும் கோயில் கோபுரங்கள் காட்சியளிக்கும் யாழ் மண்ணின் "புண்ணியம் சேர் புவியவர் மைந்தருக்கே" என்ற பெருமை கொண்ட நகுல முனிவரின் சாபம் நீங்கிய கீரிமலையின் தீர்த்தக் கரை யினை வணங்கி உயர் கோபுரம் கொண்ட நகு லேஸ்வரத்தை தரிசித்து நமது பயணத்தை தொடர்தோம்.

நேரம் செல்வதே தெரியாமல் சுட் டெரிக்கும் சூரியன் மேற்கு வானில் மையங் கொண்ட வேளையில் யாழ் மண்ணின் பொரு ளாதாரத்தில் இலாபம் கிட்டித்தரும் காங்கேசன் துறைமுகத்தை சென்றடைந்தோம். ஆர்பரிக் கும் அலைகளையுடைய இவ்வாழியானது இயற்கை அன்னை தந்த இலங்கையின் வளமாகும். பவளப்பாறைகளையும் பலவகை யான மீனினங்களையும் கொண்ட இக் கடற்பரப்பு இன்று சுற்றுலா மையமாகவும் திகழ் கின்றது. இங்கு சுற்றுலாவிற்கு வருபவர்களுக் கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலகப் பண்பாடுகளில் ஆதியில் தோன்றிய திராவிட கலாசாரம் தமிழ் மணக்கும் யாழ் மண்ணில் உள்ள இன்றைய நிலையைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று கலாசார சீரழிவுகள் இடம் பெறுவதுடன் மேலைத்தேய கலாசாரம் நம் மண்ணில் ஒட்டிக்கொண்டு நமது பாரம்பரியத்தை சிதைக்கின்றது. எனவே தமிழ் மாணக்கர்களாகிய நாம் எமது பண்பாட்டை சமுதாயத்தின் மத்தியில் பரப்புவதோடு அழிந்து வரும் நமது பாரம்பரியத்தை அழியாது பாது காக்க வேண்டும்.

மாலை 5.15 மணியளவில் பேருந்து யாழ்ப்பாணத்தின் மற்றுமொரு வரலாற்று ஆதாரமாக விளங்கும் நிலாவரை கிணற்றைச் சென்றடைநதது. வரலாற்று புகழ்பெற்ற நிலாவரைக் கிணறானது பண்டைய கால வளமாக கருதப்படுகிறது. இக்கிணறு பற்றிய பல தகவல்கள் கூறப்படுகின்றது. ஆயினும் இக் கிணறு ஆரம்பத்தில் ஆழம் அறியப்பட வில்லை எனினும் தற்போது மேற்கொண்ட ஆய்வின் படி 52.2 மீற்றர் ஆழமுடையதாகக் கூறப்படு கின்றது. இக்கிணற்றின் 18மீற்றர் ஆழம் வரையுள்ள பகுதியில் நன்னீரானது காணப்படு கிறது என்பது ஆய்வின் முடிவாக காணப்படுகி றது. மேலும் ஆய்வின் போது மூன்று வண்டி களின் பாகங்கள் கண்டறியப்பட்டுள்ளது.



இந்த வகையில் நீலக்கடலை உடுத்த யாழ் மண்ணின் பல்வேறுபட்ட பௌதிக, பண்பாட்டு அம்சங்களை பார்வையிட்ட மாணவர்களாகிய நாம் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டோம். மாணவர்களாகிய நாம் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு அனுபவமும் இனிமேல் வரும் காலங்களில் கிடைப்பதற்கரிதனாதாகும். பாடசாலை பாடங்களே உலகம் என்று வாழ்ந்த மாணவர்களாகிய எமக்கு அனுபவரீதியான பாடமாகவும் மன மகிழ்ச்சியுடைய ஒரு கலைப் பயணமாகவும் இச்சுற்றுலா அமைந்தது.

நாங்கள் யாழ் மண்ணில் பார்வை யிட்ட ஒவ்வொரு இடத்திலும் மனதின் பதிவுக ளோடு நினைவினை மீட்டுவதற்காகவும் புகைப் படங்களையும் எடுத்துக்கொண்டோம். ஆசிரியர் கள் மாணவர்கள் சகிதம் ஒன்றாக உணவு உண்டு ஒரு நாள் பொழுதை ஒன்றாக கழித் தமை மாணவர்களுக்கிடையிலான ஒற்றுமை வளர்க்க உதவுவதுடன் மாணவர்களின் ஆளு மையும் வளர்க்க துணைநிற்கிறது.

பாடசாலைக் கால நிகழ்வுகள் என்றும் மீட்டிப்பார்க்கும் சிறந்த அனுபவங்களே ஆகும். அந்த வகையில் நாம் சென்ற யாழ் பய ணமும் பசுமையான மரத்திலே அறையப்பட்ட ஆணிகள் போல மனதில் பசுமையாக பதிந் திருக்கும். இத்தகைய நினைவுகளைத் தந்த இப் பயணமானது வாழ்க்கையின் ஒரு பெரிய அங்கமாகவே திகழ்கின்றது. பேருந்தின் வழியே தொடங்கிய இந்நீண்ட பயணமானது ஆடல் பாடலுடன் ஆரம்பமாகி ஆடல் பாடலு டனே மீண்டும் கிளி மண்ணில் மாலை 6.30 மணியளவில் இனிதாக நிறைவடைந்தது.

**வி.சயங்விழி**
2019 கலைப்பிரிவு



# விளையாட்டுச் செய்திகள்

## சாதனை வீராங்கனை மேரிதமயந்தினி



2018 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் முப்பாச்சல் நிகழ்வில் எமது பாடசாலையைச் சேர்ந்த மேரிதமயந்தினி(2019 கலைப்பிரிவு) பங்குபற்றினார். இவர் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் யாழ் துரை யப்பா விளையாட்டரங்கில் நடாத்தப் பெற்ற மாகாணமட்ட தடகளப் போட்டியில் 19 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவில் சிறந்த பெண் வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் முப்பாய்ச்சல் நிகழ்வில் 10.70 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும் 10 மீற்றர் கட்டைவேலி ஓட்டத்தினை 19.09 செக் கனில் ஓடி முடித்து இரண்டாம் இடத்தி னையும் பெற்றார். இவர் தனது பன்னிரண்டு வயதில் இருந்து விளையாட்டுத் துறையில் சாதனைகளைப் புரிந்து வருகிறார். இவரது வெற்றிக்கு குடும்பத்தினரும், பாடசாலைப் பயிற்றுவிப்பாளர்களும் பக்கபலமாக உள்ள னர். இவர் மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறோம்.

## மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வுகள்






மாகாண மட்ட மேசைவரிப்பந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலை யின் 17வது பிரிவு பெண்கள் அணி 2வது இடத்தையும் 20 வயதுப் பிரிவு ஆண்கள் அணி 3வது இடத்தையும் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டது.

## சொற்சமர்

டான் தொலைக்காட்சியின் சொற்சமர் ஒளிப்பதிவு எமது கல்லூரி கேட்போர் கூடத்தில் 29.09.2018 அன்று பதிவாக்கப்பட்டது. நிகழ்வில் எமது பாடசாலை விவாத அணியினர் பங்கு பற்றி தமது திறமையை வெளிப்படுத்தினர்.




## திறன் வகுப்பறைகள் திறப்புவிழா



பாடசாலை மாணவர்க ளின் கற் றலை மேம்படுத்தும் வகையில் வடி வமைக்கப்பட்ட திறன் வகுப்ப றைகளைத் திறந்துவைக்கும் நிகழ்வு 12.09.2018 அன்று பாடசாலையில் நடைபெற்றது. நிகழ்வில் அப் போதைய கல்வி இராஜாங்க அமைச் சர் கௌரவ இராதாகிருஷ்ணன் அவர்களும் பாராளுமன்ற உறுப்பி னர் கௌரவ சி. சிறீதரன் அவர்களும் வலயக்கல்விப் பணிப்பாளர் பிரதி, உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் உள் ளிட்டோரும் கலந்து சிறப்பித்தனர்.

## இல்லமெய்வல்லுநர் நிகழ்வுகள்



பாடசாலையின் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் நிகழ்வு 27.02.2018. அன்று நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக் கல் விப் பணிப்பாளர் மு ஸ்ரீ.காந்தச் செல்வன் அவர்கள் கலந்து கொண்டார்.சிறப்பு அதிதிகளாக அபிருத்தி உத்தியோகத்தர் திரு பி நவரட்ணம் அவர்களும் திரு பி இந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர். இந் நிகழ் வில் நடைபெற்ற விநோத உடைப்போட்டியில் பங்குபெற் றிய மாணவர் ஒருவர்.



2018 அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் பேச்சு பிரிவு 2 இல் சு.ஜானுஜா மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தினையும் பிரிவு 3 பாவோதலில் க.டர்ஜிகா 3 இடத்தினையும் பெற்றுக்கொண்ட னர்.

பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு 27.02.2018 அன்று நடைபெற்றது. நிகழ்வில்




வைத்திய கலாநிதி மா. குகராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக வீ.விஜிந்திரன் அவர்க ளும் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் திரு நடராசா அவர்களும் பங்குகொண்டனர்.

# தொழில்நுட்பவியல் Technology



கோ.மதுஷிரா
A/l 2019 வணிகப்பிரிவு



மனித வாழ்க்கைப்பயணத்தின் நேரவரையில் அறிவியலின் போக்கு எவ்வாறு உயர்ஆதிக்கம் செலுத்தியதோ அந்தக் கணங்கள் ஒவ்வொன்றும் தொழில்நுட்பம், நாகரிகமும் அசுரவேகமெடுத்து வளரத் தொடங்கியதென்பது இன்று வரையுள்ள நிதர்சனமாய் நாம் கண்டு வருகின்றோம்.

இந்த அதிவேகநகர்வுப்பாதையில் தொழில்நுட்பம் நவீனமடைந்து பல சாதனைகளை நிலைநாட்டி மனிதனே கடவுள் என்ற உருவகத்தை எட்டி உள்ளது. இருப்பினும் ஒரு தாக்கத்தின் சம அளவான மறுதாக்கம் போல் இவ் வையகத்தில் வாழும் மனிதகுலம் சோதனைகளையும் தம் தோள் மீது சுமந்து வந்து ஏக்கத்தோடு மூட்டைகட்டி வைக்க வேண்டிய கட்டாயத்தில் வாழ்ந்து கொண டிருக்கின்றது. எது எவ்வாறு இருப்பினும் வளர்ச்சி என்ற எரிபொருள் மட்டும் தான் இயங்கும் என்ற கட்டாய நிலையை நாம் அனைவரும் ஏற்றாக வேண்டும்.

"களிமண்ணைப் பிசைந்து தாழி செய்த காலந்தொட்டு ஒளியிலே பயணிக்கும் இன்றைய விமானம் வரைக்கும்" மலர்ந்த காலங்கள் ஒவ்வொன்றும் தொழில்நுட்ப புரட்சியின் தொடக்கமாகவே விளங்கியுள் ளது. எனவே தொழில்நுட்பம் என்பது காலம் காலமாய் இருந்து வந்ததும் தொடர்ந்து வந்ததும் என்றே கூறமுடியும். பட்டறிவுகளின் உச்சமும் நாகரிகத்தின் உச்சமும் தொழில் நுட்பத்தை ஓரளவு நவீனமாக்கி நகர்ந்து வந்த காலங்கள் மாற்றி ஆசைகளும் போட்டிகளும் வல்லரசு வெறியுமாக இன்று தொழில்நுட்பம் கோரத்தாண்டவம் ஆடி கொடூரமாக வருவ தன் உச்ச விளைவை எம் இனத் தின் எந்த சந்ததி தலைகளில் தாங்க உள்ளதோ தெரிய வில்லை. "ஏணி கட்டி ஏறிய மனிதன் இன்று கணினி கட்டி விண்கலத்தில் பறக் கின்றான்" ஊ.... ஊ.... என அழைக்க கூடிய தூரமே தாம் கண்ட உலகம் என்று எண்ணிய மனிதன் ஆ.... ஆ... என்று அண்ணார்ந்து பார்த்து நிலையில் நிலவையும் தாண்டி அடுத்த ஞாயிற்றுத்தொகுதியை நோக்கி நகர்ந்தவாறு முகம்பார்த்து பேசி மகிழ்கின்றான். என்றால் இதுவும் தொழில்நுட்பத்தில் உச்சகட்டத்தின் தற்போதைய படிநிலை.

பச்சை உணவை உண்ட மனிதன் தீப்பிடித்து எரிந்த மாமிசத்தில் தவறுதலாக கையைவைத்து வெப்பம் தாங்க முடியாமல் விரலை வாய்க்குள் வைத்தான். அதன் சுவையை உணர்ந்தான். அன்று வளர்ந்த தொழில்நுட்பம் தான் சமையல். சமைத்த உணவைக் கொண்டு ஆரோக்கியமாய் வளர்ந்த மனிதன் தொழில்நுட்ப வளர்ச்சியால் இதுவரை ஏதோ இயற்கையோடு போராடி வாழ்ந்து விட்டான். ஆதிகால வாழ்வை மிருக வாழ்வாய் ஏளனம் செய்து விலக்கி வைத் தான் நாகரிகமாய், சுகாதாரமாய், பாதுகாப் பாய் வாழ்ந்து கொண்டிருந்த சமூகம் தற் போதைய நவீன தொழில்நுட்பத்தில் அணு ஆயுதம் கதிர்வீச்சு என்ற அழிவிப்பாதையில் நகர்ந்து கொண்டு மனிதனை மனிதன் பச்சையாக உண்ணும் தன்மை. இது எவ் வாறு உள்ளதென்றால் ஆடை இல்லாத விலங்குகளை பச்சையாக உண்ட மனித னுக்கும் கீழாக மனிதன் சென்று கொண்டி ருக்கின்றான் என்பது தெரிகின்றது.

எனவே தொழில்நுட்பத்தில் புதிய புரட்சி அடைய வேண்டும். அதன்பின் மனித நாகரிகமும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். புதிய உலகு ஒழுங்குறவாக வேண்டும். ஆபத்தை நோக்கிய தொழில் நுட்பங்களுக்கு மாற்றுநுட்பங்கள் வளர்ந்து நாம் எனும் மனிதன் கடவுளாக மாற வேண் டும் என்பதே இறுதி விருப்பமாக உள்ளது.

## ஆங்கில தினப்போட்டிகள்



மாகாணமட்ட ஆங்கில தின போட்டிகளில் தரம் 6 சி.ஆர்வலன் ஆங்கில சொல்வதெழுதல் நிகழ்வில் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றார். மேலும் தரம்11 ஐ சேர்ந்த மோ.புகழினி ஆக்கத்திறன் creative writing நிகழ்வில் 2ஆவது இடத்தை யும் தரம் 5 ஐ சேர்ந்த நி.அபிசிகா Recita tion இல் 3ஆம் இடத்தையும் பெற்று பாட சாலைக்கு பெருமையீட்டித்தந்துள்ள னர்.

## ஆங்கில தின நாடகப்போட்டி



மாகாண மட்ட ஆங்கில தின நாடகப்போட்டியில் பிரிவு 1 இல் எமது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் 2ஆம் நிலையினைப்பெற்றுள்ளனர்.

றோ.அபிஷிகா,அ.சர்மில்யன்,க.கார்றிகா,இ.கிஷாலினி,ஜெ.ஸ்ரீவைஷ்ணவி,ப.நர்த்தகி,க.நிஷிகா, நி.அபிஷிகா,சி.பாகவன்,ற.றதீசன்,வி.கலைமாறன்,ச. அகநிலா,ஆகிய மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பற்றியி ருந்தனர். ஆசிரியர் திரு.ச.ரகுநாதன் அவர்கள் மாணவர்கள் வெற்றிபெறு வதற்கான வழிப்படுத் தலைமேற் கொண்டிருந்தார்.

# கவிதைத் துளிகள்



## ஏற்றமிகு பள்ளி

பம்பரக்காய் மரங்களென
பல்லாண்டாய் பெயரெடுத்து
இன்றுவரை எழுந்து நிற்கும்
இறுமாப்பு மலைவேம்பு
வருகவென அழைக்கின்ற
ஒளிர் நிலவாம் உயர்பள்ளி
கிளிநொச்சி மகாவித்தியாலயத்தை
போற்றிடுதே உயர் மாண்பு

முல்லை நிலமாக அன்று
எல்லையின்று விரிந்து நின்ற
கிளிநொச்சி வளநிலத்தை
கழனி என ஆக்கி வைத்த
ஆற்றலுள்ள மாந்தர்கள்
விழியெனவே கல்விக்கு
ஈந்திட்ட தாய் மடிதான்
இப்பள்ளி வரலாறு

செப்பிடவே வார்த்தையற்ற
சீர்மிகு வரலாற்றை
ஒப்பிடவே முடியாத
உயர் ஈக சரித்திரத்தை
உள்ளிருந்து உயர்ந்து நிற்கும்
இப்பள்ளி எழுதவைக்கும்
ஏராளம் நினைவுகளை
உலகமெல்லாம் சுமந்தபடி
எத்தனை மாணவர்கள்
ஏற்றமிகு திருத்தலம் .இப்பள்ளி

மூத்த அதிபர்கள்
காட்டி வைத்த வழிதனிலே
காலெடுத்து நடந்து வந்து
கங்கையென கல்விதனை
இக்கழனி மாந்தர்க்கு
இன்றுவரை சொரிந்து வரும்
சொர்க்கம் தான் இப்பள்ளி

முற்றத்திலே யோகர்சுவாமி
நாட்டிய பலா ஒன்று
எத்தனை கதைகளினை
தினம் சொல்லி நிற்கிறது.
பல்லாண்டு முன்னாலே
படிக்கவென வந்த வெள்ளை
சிட்டுக்கள் சிறகடிப்பை
சீர்மிகு பண்பாட்டை
பக்குவத்தை பழக்கவழக்கத்தை
ஆனந்த நாட்களினை
கடைசிப் பிரிவொன்றில்
சொட்டி விட்ட கண்ணீரை
முதுபெரும் அவ்விருட்சம்
தன்னகத்தே வைத்து
காக்கின்றது இப்போதும்

எஞ்சினியர், வைத்தியர்கள்
உச்சமிகு கலைஞர்கள்
உயர்மிகு விற்பன்னர்கள்
சித்தத்தை சிலிர்க்க வைக்கும்.
ஈகத்தின் இமயங்கள்
அத்தனையும் பெற்றெடுத்த
அழகான தாய்வயிறு
கிளிநொச்சி ம.வி.

குண்டுகள் பலநூறு
போர்கள் பல தடைவை
இடப்பெயர்வு எண்ணற்றவை
இடிபாடு காயங்கள்
வழிவழியே கண்டபோதும்
சளைக்காது போராடி
தளைத்திட்ட தரம்மிக்க
கிளிநொச்சி ம.வியை
புகழாதோர் யாருமில்லை

அடக்கமிகு மாணவர்கள்
ஆற்றல் மிகு ஆசிரியர்கள்
சிறந்த நல்ல அதிபர்கள்
சீர் துணையாய் பெற்றோர்கள்
அணைக்கும் பழைய மாணவர்கள்
அத்தனையும் சேர்ந்து நிற்கும்
இத்தரணி மீது
எப்பொழுதும் புகழ் சூடும்
எழில் மண்ணின் ஏற்றம் இது.

மாற்றங்கள் நிகழ்கின்ற
மாண்புமிகு மாணவர்களை
தொன்றுதொட்டு பெற்றெடுத்த
தூயதாய் இப்பள்ளி
கல்வி கற்க வருகின்ற
நம்பிக்கைச் சுடர்களினை
இமயத்தில் ஏற்றி வைக்கும்
இசைவுபட வாழ்வு தரும்

அழகான மரக்கூட்டம்
பறந்து திரியும் வெளவால்கள்
தாவும் குரங்குகள்
குளத்தடியில் கொக்கு, நாரை
குளிர்மை மிகு வாய்க்கால்கள்
வருடி வந்து கல்வி கற்று
உயர்ந்த பல் இடங்கள்
கையெடுத்து வரவேற்கும்
கிளி மகாவித்தியாலயத்தை
நாமும் தினம் தோறும்
நல்லவராய் வல்லவராய்
வாழ்ந்திடுவோம் வாழ்நாளில்.

ர.தமிழினி – கலைப்பிரிவு 2020

## நட்பு

நட்பு என்பது பல இடங்களில்
போகும் ரோஜா மலர்கள்
அல்ல நம் இதயத்தில்
பூக்கும் பாச மலர்கள்... !

மலர்களின் எண்ணிக்கை
கொண்டு தோட்டத்தின்
அழகை அறியலாம்
நட்பின் எண்ணிக்கை
கொண்டு வாழ்க்கையின்
அழகை அறியலாம்....!


முகத்தில் தெரியும்
அழுகையையும் சிரிப்பையும்
காண்பது உறவு
அழுகைக்கும் சிரிப்புக்கும்
பின் இருக்கும் காரணத்தை
கண்டறிவது நட்பு.!

ரா.சிரோமிதா
கலை 2020

## அம்மா

மனதுடைந்து நான் அழுகின்ற நாட்களில்
என் கண்ணீர் துடைக்கும் முதல் கரம்
நீ தான் என் தாயே –பசியில் பல
நாட்கள் இருந்தாலும் அன்பு காட்டும்
போது மட்டும் உன் தெம்பு குறைவதில்லை
நீஎன்னுடன் இருக்கும் வரை
நான் புரிந்து கொள்ளவில்லை – நீ
என்னை பிரிந்த பிறகு தான் புரிந்து
கொண்டேன் என்னை அரவணைக்க
உன்னை விட யாருமில்லை
வார்த்தைகள் இல்லாத வடிவம்
அளவே இல்லாத அன்பு
சுயநலமில்லாத இதயம்
வெறுப்பை காட்டாத முகம் – என்றும்
நீ மட்டுமே என் தாயே
ஏழேழு ஜென்மங்களில் நம்பிக்கை
இல்லை எனினும் இன்னொரு ஜென்மம்
இருந்தால் என் மகளாக மீண்டும்
நான் பிறக்க வேண்டும் அதுவே போதும்!

ச.தேனுஜா விஞ்ஞானப்பிரிவு



## அன்பு

தாயன்பு தவத்திலும் சமமானது
தந்தையன்பு தரணியில் உயர்வானது.
மழலை அன்பு மகத்துவமானது
மக்கள் அன்பு மாண்புமிக்கது
ஆசானின் அன்பு அகிலத்தை வெல்லும்
இத்தனை அன்பும் கிடைத்துவிட்டால்
உலகம் உன்கையில் தவழும்

தி.தஜிகன்
வணிகப்பிரிவு - 2019

வி.பிரணவி
உயிரியல் பிரிவு - 2020



# புளியம் பொக்கானை நாகதம்பிரான் ஆலயம்

பண்டைத்தமிழன் இயற்கையை வழிபட்டான் என்பதற்குச் சான்றாக விளங்கும் ஒரு புனித தலமே புளியம் பொக்கானை நாகதம்பிரான் ஆலயம்.இது ஈழமணித்திருநாட்டிலே வடபாகத்தில் நெல்வயல் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்திலே கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவிலே அமைந்துள்ளது. பரந்தன் முல்லை சாலையிலே புளியம் பொக்கானைச் சந்தியில் இருந்து நான்கு கிலோமீற்றர் உள்ளே சென்றால் ஆலயத்தை அடையாளம் காணலாம். கல வெட்டித்திடல் என்னும் பழம்பெருங் கிராமத்தின் நுழைவாயிலே ஆலயம் தான்.

வானுயர்ந்த கோபுரங்கள் பார்ப்போரை கைகூப்ப வைக்கும். கோயிலைச் சுற்றி வேம்பு, பாலை, நாவல், மரச்சோலை, தீர்த்தக்கேணி, அன்னதானமடம் என்பன அமைந்துள்ளன. ஆலயத்தின் வெளிவீதியில் நேர்த்திக்கடனுக்கு தேங்காய் அடிக்கப்படும் இடம், பெரிய நல்ல தண்ணீர் கிணறு, சுற்று மதில் அமைத்து அழகாக காட்சிதரும் ஆலயம்.

முன்புறம் இருவாயில்களும் இரு மூல விக்கிரகங்களும் ஒருபுறம் எல்லாம் வல்ல முழு முதற்கடவுளாகிய சிவபெருமானின் கருவறையும் மறுபுறம் இயற்கை கடவுளாகிய நாகதம்பிரானின் கருவறையும் உள்ளே ஆலயத்தை சுற்றி முருகன், வைரவர், தட்சணாமூர்த்தி ஆலயங்கள், நடராஜா பெருமானின் சந்நிதானம், கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபத்தோடு கூடியதாகவும் வசந்த மண்டபம் இரு மூர்த்திகளுக்கு உரியதாகவும் காணப்படுகின்றது.

ஆலயத்தில் நித்திய, நைமித்திய, காமியக் கிரிகைகள் யாவுமே ஒழுங்கு முறையில் நடைபெறுகின்றன. நடராஜா பெருமானுக்கு ஆகம முறைப்படி அந்தண சிவாச்சாரியர்களும் நாகதம்பிரானுக்கு கிராமிய முறைப்படி கிராமிய பூசகர்களாலும் பூசை இடம் பெறுகின்றது. நடராஜாபெருமானுக்கு ஆவணிமாதம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்த திருவிழாவுடன் திருவிழா நிறைவுபெறுகின்றது.

தம்பிரானுக்கோ பங்குனி உத்தரத்துக்கு முதல் எட்டு நாட்களுக்கு முன் விளக்கு வைத்து பண்ட வண்டில்கள் தென்மராட்சிப் பிரதேசம் நோக்கிச் சென்று தம்பிரானுக்கு வேண்டிய இளநீர், பழவகைகளும், ஏனைய பூசைப்பொருட்களும் எடுத்து வைத்து பங்குனி உத்தர நன்னாளில் பொங்கல் இடம் பெறும். இது தம்பிரான் அவதரித்த நன்னாள் ஆகும். இப்பெருமானின் அற்புத வரலாற்றை நாகதம்பிரான் தலபுராணத்தின் ஊடாக அறிய முடிகின்றது. இது 1960ஆம் ஆண்டு குடாப்பூர் குமாரசாமிப்புல வரினால் பாடப்பட்டதாகும்.

அதிலிருந்து சில தகவல்கள் குறிப்பிட முடியும். அதிலிருந்து எடுக்கப்பட்ட சில விபரங்கள் வருமாறு அதாவது புளியம் பொக்கானைக் கிராமத்துடன் இணைந்த கொழுந்துப்புலவு என்னும் சிற்றூரில் வேளாண் குடித்தலைவராக நீதிநாயகம் முதலியார் விளங்கினார். இவர் செல்வந்தராகவும் சிவபக்தி நிறைந்தவராகவும் காணப்பட்டார். இவருக்கு ஏற்ற துணைவியாக கமலம் விளங்கினார். அத்தம்பதிகளுக்கு மாட்பாண முதலியார், வவுனியா முதலியார் என இரு ஆண் மக்கள் இருந்தனர். அடுத்து வள்ளிநாச்சான் என்ற பெண்குழந்தையும் தம்பிரான் என்ற பாம்பும் இரட்டைக் குழந்தையாக பிறந்தனர்.

எல்லோரையும் சம அன்போடு தாய் தந்தையர் வளர்த்து வந்தனர். மனிதப் பிள்ளைகளுக்கு விவாகம் செய்து சொத்தைப் பங்கிடும் வேளையில் தம்பிரான் தனக்குரிய பங்கைப் பெற்று தங்கையாருக்கே வழங்கியது. தம்பிரான் தானும் தனக்கேற்ற துணைகளைத் தேடி மகிழ்ந்திருக்கும் போது ஒருநாள் தாய் முற்றம் கூட்டுகையில் சிறிய பாம்புகள் அவரைச் சுற்றி சுற்றி வேலை செய்ய விடாது விளையாடின. இதனால் கோபமடைந்த தாய் "தொலைந்து போ" எனப் பேசிக்கலைத்தார்.

அதனோடு கோபம் கொண்ட எல்லாப் பாம்புகளும் வரிசையாக புதூரைச் சென்றடைந்தன. புதூரை அடைந்த பாம்புகள் மீண்டு வந்து அரசமர நிழலில் இருந்து ஓய்வெடுத்த போது அங்குள்ள புற்றுனுள் புகுந்து கொண்டன. இவ்விடமும் நாகதம்பிரானுக்கு வழங்கப்பட்ட இடமே. அதன் பின் அங்கேயே வீடமைத்து பால் பழம் வழங்கி வந்தனர். அதே இடத்திலே இன்றும் புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. தம்பிரானின் உறவினர்களே பால், பழம் வைப்பதுடன் பூசையும் செய்து வருகின்றனர்.

போர்த்துக்கேயர் தமது ஆட்சியில் இவ்வழிபாட்டு முறையை கேலி செய்து, மக்களை விரட்டிய போது ஐந்து தலைநாகமாக குடத்தில் இருந்து வெளிவந்து படம் எடுத்தது. அதன் பின்னர் தம்பிரானின் புதுமை அறிந்து அவர் களே நிதி வழங்கி கோயில் அமைத்து பொங்கி வழிபட்டனர்.


இவ்வாறு இன்று வரை வழிபடுவோரின் இடர்களை நீக்குபவராக தம்பிரான் காணப்படுகிறார். திருமணம் நிறைவேறாதவர்கள், நோயுற்றவர், பிள்ளைகள் இல்லாதவர் இங்கு வந்து வழிபட்டு சாந்திகள் செய்து அவர்கள் குறைகள் நீங்கப் பெறுகின்றார்கள்.

"நாகதம்பிரான் நல்லருள்
நாடெங்கும் பாலிக்கும்"

# வணிகவிழா

கிளிநொச்சி மகாவித்தியாலய வணிகமன்றத்தினரால் 05.07.2018 அன்று வணிக விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிர தம விருந்தினராக திருமதி.ஜெயரூபி தர்சன் (முகாமையாளர் பிராந்திய அலுவலகம், இலங்கை மத்திய வங்கி கிளிநொச்சி) அவர்களும் சிறப்பு விருந்தினராக செல்வி கிறேஸ் கயசிந்த் கெல்மன் (விரிவுரை யாளர், சந்தைப்படுத்தல்துறை யாழ்பல்க லைக்கழ கம்)அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந் நிகழ் வானது மங்கல விளக்கேற்றல், வரவேற்புரை,அதிபரின் ஆசியுரை வரவேற்பு நடனம், மாணவியரின் பேச்சு, நாடகம் என்பன நடைபெற்றன. இதனைத்தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை நடைபெற்றது. தொடர்ந்து மாணவரின் முன்னேற்றத்தில் விஞ்சி நிற்பது கனிவா? கண்டிப்பா? என்ற தலைப்பில் விவாதம் இடம்பெற்றது. அடுத்து வணிகப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2017 ஆண்டு வர்த்தகப்பிரிவில் பல்கலைக் கழகத் திற்குத் தெரிவான மாணவர்களுக்கான கௌரவிப்பு நடைபெற்றது.

# வழிகாட்டல் செயலமர்வு



க.பொ.த உயர்தரத்தில் புதிதாக இணைந்து கொண்ட 2020 மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு சில நாட்களாக நடைபெற்றது. 03.04 05.2018 அன்று நடைபெற்ற செயலமர்வின் போது சில பதிவுகள்.


## போட்டி முடிவுகள் மாகாணம்

**வணிகக் குழுவினர்-**
ச. சாரங்கன் - தரம் 11, 02 ஆம் இடம்.
உ.ஆனந்தி தரம் -10, 3 ஆம் இடம்.

**வணிகக் கட்டுரை-**
மோ. புகழினி தரம் - 11, 01 ஆம் இடம்.

**விவசாயம் குழுவினர்-**
ச. சாரங்கன் தரம்- 11, 2 ஆம் இடம்.

# பதிவுகள்...




தேசிய இளைஞர் படையணியின் கனிஷ்ட பிரிவில் பயிற்சி பெற்ற எமது பாடசாலை மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும்

தேசிய இளைஞர் படையணியின் சிரேஷ்ட பிரிவில் பயிற்சி பெற்ற எமது பாடசாலை மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும்




## ஒன்று கூடல்



2018 உயர்தரவகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் உயர்தர மாணவர்மன்றத் தலைவர் தி.சுகிராஜ் தலைமையில் அன்றுநடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல யக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. ஜோன் குயின்ரஸ் அவர்களும் சிறப்பு விருந்தினராக வணக்கத்திற் குரிய யோசுவா அடிகளும் கலந்து கொண்டனர். காலை 10 மணிக்கு ஆரம்பமாகி சிறப்புற நடை பெற்ற இந்நிகழ்வு மாண வர்களின் இசை நிகழ்வுடன் மாலை இனிதே நிறை வுற்றது.


## கிளிநொச்சி மாவட்டத்தமிழ் சங்கத்தின் வெளியீடான தமிழ் எழில் இதழ்



தமிழ் எழில் இதழானது கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்ச் சங்கத்தின் ஒரு வெளியீடாகும். இவ்விதழ் முதன்முதல் 1999ஆம் ஆண்டு ஜெயபுரத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் வெளியிடப்பட்டது. இருப்பினும் அக்கால சூழல் காரணமாக காரணமாக ஐந்து ஆண்டுகளோடு நிறுத்தப்பட்டது. தமிழ் எழில் மீண்டும் தனது ஆறாவது பதிப்பினை வெளியிட்டுள்ளமை வாசகர்கள் மத்தியில் மகிழ்ச்சியான விடயமே. அந்த வகையில் வெளிவந்துள்ள தமிழ் எழில் ஆனது பலதரப்பட்ட வாசகரகளையும் கவரும் தன்மை கொண்டதாக உள்ளது. இது மட்டுமன்றி தமிழ்மொழி கலை, கலாசாரம் என்பவற்றோடு பரந்துபட்ட கட்டுரைகள், கதைகள், தொகுப்புக்கள் குறித்த விடயங்கள் உள்ளடக்கி வெளிவரும் இதழ் காலத்தின் இன்றி அமையாத தேவையாகும். இவ்இதழ் தொடர்ந்தும் பயணிக்க இவர்களின் பெரும் முயற்சி தொடர வேண்டுவோம்.

**யதுர்ஷா - 2019 கலைப்பிரிவு**

## எமது பாடசாலையின் சாரணர் அணியினர்
## KN/KILINOCHCHI MAHA VIDYALAYAM



அகம்
செய்தி மடல்

தொலைபேசி இலக்கம் :- 0212285414
email kilinochchimv@yahoo.com
வெளியீடு :- உயர்தர மாணவர் மன்றம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்
தலைவர் :- சு. சிவனுஜன்
செயலாளர் :- கோ.மதுனிஜா
பொருளாளர் :- செ.அனுஜன்
பதிதிராதிபர் :- வி.பவிக்ஷன்
பொறுப்பாசிரியர் :-ந குகபரன்

## சவால் நிறைந்த பணி

போட்டிப் பரீட்சைகளில் மாணவர்களின் எதிர்காலம் தீர் மானிக்கப்படும் இன்றைய கல்வி முறைமையில் பன்முக ஆற்ற லைக் கொண்ட மாணவ சமு தாயத்தை உருவாக்குவது சவால் நிறைந்த பணியாக உள்ளது. மாறிவரும் சமூக அரசியல் பண் பாட்டு சூழல் பாடசாலைகளின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு பல்வேறு அழுத்தங்களைத் தரு கிறது. இத்தகு புறநிலையில் கிடைக்கக் கூடிய வெளிகளைப் பயன்படுத்தி பண்பட்ட கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண் டியது காலம் கருதிச் செய்ய வேண்டிய கூட்டுப்பொறுப்புமிக்க பணியாகும். இவ்வகையில் பல் வேறு சவால்களைத் தாண்டி மீண்டெழும் கிளிநொச்சி மாவட் டத்தின் கல்வி வளர்ச்சிக்கு அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியமானது.

கிளிநொச்சி மகாவித்தியால யத்தில் ஏறத்தாழ முந்நூற்றைம் பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்தரப் பிரி வில் கல்விகற்கிறார் கள். இவர்களை உள்ளடக்கிய உயர்தர மாணவமன்றத்தின் வெளியீடாக அகம் என்ற செய்தி மடல் வெளிவருகிறது. புலரும் இச் செய்தி மடல் மாணவர்களின் படைப்புகளோடும் பாடசாலை யின் நிகழ்வுகள் தொடர்பான பதி வுகளோடும் பிரசவமாகிறது. மாணவர்களின் எழுத்தாக்க முயற்சிக்குக் களமாகவும் பாட சாலையின் செயற்பாடுகளை ஆவணப் படுத்தி, மாணவர்களுக் கான உந்தலை வழங்கும் நோக்குடனும் அகம் செய்தி மடல் தொடர்ந்து வெளிவரும்.

-ஆசிரியர்



பா.யதுர்சினி
2020 கலை

## பாரதியார்

இந்தியாவின் தமிழ் நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் 1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி சின்னத்தம்பி ஜயர் இலக்குமி அம்பாள் தம்பதியருக்கு பாரதியார் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன். ஆனாலும் இவரை சுப்பையா என்றே அழைத்தனர். 1887ஆம் ஆண்டு இவருக்கு 5 வயதாக இருக்கும் போது தாயாரான இலக்குமி அம்பாள் மறைந்தார். இவரது பாட்டியான பகீரதிஅம்பாளிடமே வளர்ந்து வந்தார். தனது 11ஆம் வயதில் பள்ளியில் படித்து வரும் பொழுது கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 20ஆம் நூற்றாண்டினுடைய இணையற்ற கவிஞராகவும் 20ஆம் நூற்றாண்டு பாரதியின் யுகம் என்று சொல்லுமளவிற்கு பாரதியினுடைய பெருமைகள் பறைசாற்றப்பட்டுள்ளன. தமிழ்ப்பற்று, தேசப்பற்று போன்றவற்றை தன் கண்கள் போன்று நேசித்த இவரை நவீன கவிதையின் முன்னோடி, நவீனதமிழ்க் கவிதையின் பிதாமகன் போன்றெல்லாம் சிறப்பாகப் போற்றப்படுகின்றார்.

சொல்புதிது, பொருள்புதிது, ஓசைபுதிது நவ கவிதையின் நாயகன் நானே என்று சொல்லும் அளவிற்கு எளிய பதம், எளிய மொழி பொதுசனம் விரும்பும்மொட்டு என்பன இலக்கிய உலகில் பாரதிக்கு தனிச்சிறப்பை உணர்த்தியுள்ளது. பாரதியினுடைய இலக்கியப் படைப்புக்களை தனிப்பாடல்கள், பல்சுவைப்பாடல்கள், சுயசரிதை, தெய்வபக்திப்பாடல்கள், தேசபக்தி பாடல்கள் எனப்பலவகைகளாகப் பாகுபடுத்தலாம்.


ஸ்வர்ண குமாரி, ஆறில் ஒரு பங்கு ஆகிய கதைகளையும் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற பாடல்களையும் சின்னச் சங்கரன் கதை என்ற நெடுங்கதையையும் ஞானரதம் என்ற நீதி நூலையும் நவதந்திர கதைகள் என்ற தத்துவ நூலினையும் பாரதியார் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1897ஆம் ஆண்டு செல்லம்பாள் என்பவரைத் திருமணம் செய்தார். இதன் பயனாக தங்கம்மா, சகுந்தலா எனும் இரு பிள்ளைச் செல்வங்களை பெற்றார். பாரதியார் தமிழ், ஆங்கிலம்,கிந்தி, சமஸ்கிருதம், வங்காளம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். பாரதியாரை மகாகவி சத்திதாசம் சுப்பையா முண்டாசுக்கவிஞர் எனவும் அழைப்பர். இவர் சுதந்திரப் போராட்டத்தின் போது இந்தியா, சுதேச மித்திரன், பால பாரதி, சக்கரவர்த்தினி போன்ற பத்திரிகைகளில் பத்திரிகை ஆசிரியராக கடமையாற்றி பிரித்தானிய அரசிற்கு எதிரான கருத்துக்களை பத்திரிகை வாயிலாக அச்சமின்றி வெளிப்படுத்தியுள்ளார் எனலாம். இவர் செய்தியாளராக பணி புரிந்தவர். எனினும் இவர் கவிஞர் ஆகவே எல்லோராலும் அறியப்பட்டார்.

1898ல் தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையை அடைந்தார். இதனால் காசிக்கு சென்று 1902 வரை இங்கு வாழ்ந்தார். பின்னர் எட்டயபுரத்து மன்னர் பாரதியாரை அழைத்து வந்து அரண்மனையில் வாழ வழி ஏற்படுத்திக் கொடுத்தார். 7 ஆண்டுகள் பாட்டு எழுதாமல் இருந்த பின்னர் 1904ஆம் ஆண்டு மதுரையில் இவர் எழுதிய பாடல் விவேகபானு இதழில் வெளியானது. 1921ஆம் ஆண்டு யூலை மாதம் திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோயிலில் உள்ள யானை பாரதியாரைத் தாக்கியதால் நோய்வாய்ப்பட்ட இவர் 1921 செப்ரெம்பர் 12 அதிகாலை 1.30 மணியளவில் பூதவுடல் நீக்கி புகழ் உடல் தாங்கினார்.

## முத்தமிழ் விழா

2018 ஆம் ஆண்டிற் கான வருடாந்த முத்தமிழ் விழா முழுநாள் நிகழ்வாக 04.10.2018 அன்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் பாடசாலை அதிபர் ஸ்ரீஜயந்தி தனபாலசிங்கம் தலை மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி ச. கமலநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கிளிநொச்சி கல்விவலய அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.த. மயூரன் அவர்களும் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பா ளர் திரு.அ.ரவீந்திரன் அவர்க ளும் தமிழ் ஆசிரிய ஆலோசகர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்க ளும் கலந்து சிறப்பித்தனர். முழு நாள் நிகழ்வாக நடைபெற்ற



இவ்விழாவில் பேச்சு, நடனம், பாட்டு, நாட்டுக்கூத்து, கவியரங்கம், விவாதம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் அரங்கேறின. நடைபெற்ற நிகழ்ச்சிகளில் 450 மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றமை சிறப்பான விடயமாக இருந்தது.



## எது என் அழகு?

அஞ்சனம் தீட்டிய மை அழகோ !என்
ஆம்பல் நிகர்க்கும் விழியழகோ?
செங்கதிர் வீசும் ஒளி அழகோ - எழில்
மாதுளை எந்தன் இதழ் அழகோ
மேகம் தவழும் மலையழகோ
எது அழகென்று ஏங்குகின்றேன்
என் தாயவளே பதில் கூறிடுவாய்

சாமரம் வீசும் குழல் அழகோ - கடலில்
சங்கமமாகும் நதி அழகோ?
போர் கண்ட அர்சுனனின் வில்லழகோ - என்
குனித்த புருவம் தனியழகோ
குங்குமம் கொண்ட முகம் அழகோ - ஒளி
கொட்டும் முழுநிலவழகோ
எது அழகென்று ஏங்குகின்றேன்
என் தாயவளே பதில் கூறிடுவாய்

இப்படியாக பெண்களின் அழகை மாத்திரம் பார்க்கும் இவ்வுலகம் எமது திறமையையோ அல்லது எமது உரிமைகளையோ பார்ப்பது இல்லை எமக்காக எதையும் விட்டுத்தருவதும் இல்லை.

**உ.கருணிகா**
கலை 2019



## ஒளிவிழா

பாடசாலையின் ஒளிவிழா ,01.11.2018 அன்று கேட்போர்கூடத்தில் சிறப்பான வகையில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் கிளிமறைக் கோட்ட முதல்வரும் ஆன்மீக குருவுமான அருட்பணி யேசுதாசன் அடிகளும் அருட்சகோதரன் லியோ அவர்களும் அருட்தந்தை டானியல் அடிகளாரும் கிறிஸ்தவ நாகரிக ஆசிரிய ஆலோசகர் சகாயசாஜா அவர்களும் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர்.
மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கை அணிசெய்தன.
போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## பஞ்சதந்திரம்



சக்தி தொலைக்காட் சியினால் நடாத்தப்படும் பஞ்சதந்திரம் நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்று தேசிய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு நிகழ்வில் பங்குபற்றிய அணியினர்.

## பரிசளிப்பு விழா






பாடசாலையின் 2018 ஆண்டு வருடாந்த பரிசளிப்பு விழாவானது 12.07.2018 அன்று இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது. காலை அமர் வில் ஆரம்பப் பிரிவு மாண வர்களுக்கான பரிசில் வழங் கல் நிகழ்வு நடைபெற்றது. இதற்கு பிரதம அதிதியாக இலங்கை வங்கி விசுவமடுகிளை உதவி முகாமையாளர் செல்வி ஆனந்த ராசா சசிவதனா அவர்கள் கலந்துகொண்டார்.சிறப்பு அதிதியாக கிளி நொச்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி சிவப் பிரகாசம் ஜனனி அவர்கள் கலந்துகொண்டார்.

இரண்டாவது அமர்வு மதியம் நடைபெற்றது. இதில் இடைநிலைப் பிரவு மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.இந்நிகழ்வில் கிளிநொச்சி வைத்திய சாலை வைத்தியகலாநிதி திரு முருகேசு ஸ்ரீதர் அவர்கள் பிரதம அதிதியாகவும் கிளிநொச்சி கல்வி வலய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. பசுபதி அருந்தவச்செல்வன் அவர்கள் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.



## நவராத்திரி விழா

நவராத்திரியை முன் னிட்டு மாணவர்கள் மத்தியில் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் போட்டிகள் இந்துமாமன்றத்தினால் நடாத்தப்பட்டன. கோலம் போடுதல், மாலைகட்டுதல், பேச்சு,உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. 17.10.2018 அன்று மாணவர்க ளின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் முழுநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.மறுநாள் விசேட பூசை வழிபாடுகளும் ஏடுதொடக்குதல் உள்ளிட்ட நிகழ்வுகளும் நடைபெற்றன.



## தெளிவூட்டல்




அவசர அம்புலன்ஸ் சேவை தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு 16.10.2018 அன்று பாடசாலையில் நடைபெற்றது.

(அழைப்பு இலக்கம்- 1990)

## சஞ்சிகைகள் அறிமுகம்




உயர்தர மன்றத்தின் கூட்டத்தில் ஈழத்தில் தற்போது தற்பொழுது வெளிவரும் சஞ்சிகைகள் தொடர்பான அறிமுகப் படுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

## தளபாடம் கையளிப்பு



உயர்தரவகுப்புமாணவர்களின் தனபாடப் பிரச்சினையினை நிவர்த்தி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி.சிறீதரன் அவர்களின் முயற்சியால் வடமாராட்சி பிரதேசசபைத் தவிசாளர் திரு ஐங்கரன் அவர்கள் தனதுதனிப்பட்ட விருப்பில் 1 இலட்சம் ரூபாநிதியினை வழங்கினார். இந்நிதி மூலம் தயாரிக்கப்பட்ட தளபாடங்களை மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கையளிக்கும் நிகழ்வு 23.05.2018 அன்று நடைபெற்றது.

## செயற்பட்டு மகிழ்வோம்



தரம் மூன்றைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு பெண் மாணவிகள் செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

## சேவை நலன் பாராட்டு விழா



இடமாற்றம் பெற்றுச் சென்ற 25 ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா 17.11.2018 அன்று நடைபெற்றது.



## பாடசாலையின்
## அதிபர்
## பிரதி அதிபர்கள்
## ஆசிரியர்கள்
## கல்விசாரா
## ஊழியர்கள்
## 2018

கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலயம்



## உயர்பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கான கௌரவிப்பு



க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயர் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலைமுதல்வர் திருமதி.ஜெயந்திதன பால சிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாணஆளுநர் கௌரவ ரெஜினோல்ட்குரே அவர்கள் கலந்து சிறப்பித்தார். குறித்தநிகழ்வில் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் உள்ளிட்டகல் விப்புலம் சார்ந்த பலரும் பாடசாலைச் சமூகத்தினரும் பங்குபற்றினர். சவால்களுக்கு மத்தியில் சாதனை புரிந்தமாணவர்களை ஆளுநர் வாழ்த்தினார். ஆய்வு கூடம் உள்ளிட்ட பௌதிகவசதிகள் இல்லாத போதும் மாணவர்கள் தமதுகல்வியில் சாதனை புரிந்துள்ளனர். வசதிகள் பல உள்ளபோதும் சாதிக்க முடியாதவர்கள் உண்டு. நெருக்கடிகள் உள்ளபோதே சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும் என்பதையும் வலியுறுத்திய ஆளுநர் தனது அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.




## சாதனை மாணவி அபிராமி நகுலகுமார்



விடாமுயற்சியின் பலனாக களம் பல கண்டு வெற்றி மாலைகளைத் தனதாக்கியவர் அபிராமி. தாயாரதும் ஆசிரியர்களதும் ஒத்துழைப்பேதனது வெற்றிக்கான ஆதாரம் என நினைவிற்கொள்கிறார். தற்பொழுதுதரம் 13 உயிரியல் பிரிவில் கற்கும் இவர் பேச்சு,விவாதம்,கட்டுரை எனப் பலதுறைகளில் ஆற்றல் நிறைந்தவர்.

2008இல் தரம் 3 இல் கட்டுரைப் போட்டியில் தேசியரீதியாக 1ஆம் இடத்தைப் பெற்ற இவர் 2010 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டநிலையில் 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டவர்.க.பொ.தசாதரண பரீட்சையில் 8 ஏ பிபெறுபேற்றினைப் பெற்றஅபிராமி இதுவரைதேசியரீதியில் 15 முறைமுதலாம் இடத்தையும் 2 முறை இரண்டாம்இடத்தையும் 3 முறை மூன்றாம் இடத்தையும் தனதாக்கியுள்ளார். இவரது சாதனைப பயணம் மேலும் தொடரவாழ்த் துகிறோம்.

## கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்

2018ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பாராட்டு விழா



ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சிமாவட்டவெட்டுப்புள்ளியான 163ம் அதற்குமேலும் பெற்று 56 மாணவர்கள் தமக்கும் பாடசாலைக்கும் பெருமைசேர்த்தனர். இவர்களில் க.தெனுஷன் என்றமாணவன் 194 புள்ளிகளைப் பெற்றுஅகில இலங்கையில் 4வது இடத்தினைப் பெற்றுசித்தியடைந்தார்.



## துயரம் சுமந்து...

பார்புகழவாழ்ந்த இனம்
முகம் சிதைந்துபோனதேன்
ஊர் ஊராய் புலம்பெயர்ந்து
பண்பழிந்து வீழ்ந்ததேன்.
ஏர்பிடித்துதினம் உழுது
எல்லோர்க்கும் உணவளித்தோர்
மாரடித்தழவும் வழியற்றுச்
சாய்ந்ததேன்?
அடிவயிறு கலங்குது
அவலங்கள் நினைவாகுது
கூடி வாழ்நத கூடு கருகி
சாம்பல் திடலானது
அஞ்சிவாழ்ந்தோம்.
கஞ்சிக்கும் வழியற்றுஅலைந்தோம்
ஆறுதலுக்காகத் துடித்தோம்.
கடைசிவரை மடிந்தோம்
பூட்டப்படாதபுழுதிமண் கரையில்
வாடிச்சிதைந்த பெருந்துயரை
எண்ணவும் துணிவில்லை.
வேண்டாம் துயரம்.

ம.டினோஜா
2019 உயிரியல் பிரிவு

எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம். 021 221 9893